# G.C.E. ORDINARY LEVEL
க.பொ.த சாதாரண தரம்

**STUDENT SEMINAR SERIES – 2022 (2023)**
**மாணவர்களுக்கான கருத்தரங்கு தொடர் - 2022 (2023)**

# GEOGRAPHY
புவியியல்

# QUESTION PAPER - 3
## மாதிரி வினாத்தாள் - 3
புவியியல்



අනුග්‍රහය

The Nation's e-learning Portal for The General Education

**கல்வி அமைச்சு**
**தொலைக்கல்வி அபிவிருத்தி பிரிவு**
**க.பொ.த (சாதாரண தர) பரீட்சை – உதவி கருத்தரங்கு தொடர் - 2022 (2023)**

# 61 - புவியியல் I, II

**தரம் 11** நேரம்: 3 மணித்தியாலங்கள்

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

## புவியியல் I

- **இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களைக் கொண்டது.**
- **ஒவ்வொரு வினாவிற்கும் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடை அளிக்கவும்.**

### பகுதி I

இலக்கம் 1 – 5 வரையான வினாக்களுக்கான விடையினை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக

01. .......................................... உலகின் ஆழமான சமுத்திரப் பகுதி ஆகும்
( மின்டானோ / மரியானா / குரில் )

02. மூடியிலிருந்து .............................. கிலோமீற்றர் வரை வெளிமையம் விரிவடைந்துள்ளளது. ( 1220 / 2250 / 2900 )

03. வருடாந்த மழைவீழ்ச்சியானது 250mm - 300mm இற்கு இடையில் காணப்படுவதோடு மூடுபனியும், மழைபனியும் காணப்படுவது .......................................... காலநிலை வலயத்தின் பிரதான இயல்பாகும் (குளிர் /துந்திரா /இடைவெப்ப)

04. ஆபிரிக்காவின் .......................................... பள்ளத்தாக்கு ஆசியாவிற்கு வெளியே நெற்செய்கை பண்ணப்படும் பிரதேசமொன்றாகும். ( நைகர் / கொங்கோ / நைல்)

05. .......................................... பயிர்ச் செய்கைக்கு செம்பூரான் மண் மிகவும் பொருத்தமானது
(தேயிலை /இறப்பர் /தென்னை )

**இலக்கம் 6 – 10 வரையான ஒவ்வொரு வினாவும் சரியாயின் “(ச)” எனும் எழுத்தினைச் சுற்றியும் பிழையாயின் “(பி)” எனும் எழுத்தினைச் சுற்றியும் வட்டமிடுக**

06. கனிய வளங்களைப் பெற நிலத்தை அகழ்வதால் நிலம் பாதிப்பிற்குள்ளாகின்றது. ச / பி

07. தேயிலைப் பயிர்ச் செய்கையை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர் ஹென்றி விக்ஹெம்மி ஆவார் ச / பி

08. இந்தியாவில் பீகார், ஒரிஸ்ஸா பிரதேசங்களில் இரும்புருக்கு உற்பத்தி மத்திய நிலையங்கள் அமையப்பெறக் காரணம் அங்கு நிலக்கரிப்படிவும் இரும்பும் அதிகம் காணப்படுகின்றமையாகும். ச / பி

09. கிரனைட், பசோல்ட் பாறைகள் உருமாறிய பாறைகளுக்கு உதாரணங்களாகும். ச / பி

10. அபிவிருத்தியை அளவிடுவதற்கான நவீன குறிகாட்டியொன்றாக மனித அமுக்கச் சுட்டெண் பயன்படுத்தப்படுகிறது. ச / பி

- **இலக்கம் 11 – 15 வரையான வினாக்களுக்கு இடைவெளிக்கு பொருத்தமான விடையினை எழுதுக**

11.இலங்கையில் விவசாய தொழில்நுட்ப பூங்கா ……………………………இல் அமையப் பெற்றுள்ளது.


12.இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் கூடுதலான பங்களிப்பு ……………………………………… துறைக்குரியதாகும்.

13.கனியவள வகைப்படுத்தலில் நிலக்கரியானது……………………………………… கனிய வகைக்குள் அடங்குகிறது.

14.துருவமான், பண்டா, துருவக்கரடி என்பன ……………………………………… காட்டுப் பகுதியில் காணப்படும்.

15.ஐஜெப்ஜல்லா ஜோகுல் எரிமலை ……………………………………… இல் அமைந்துள்ளது.

**கீழே தரப்பட்டுள்ள இலங்கைப் படத்தினை அடிப்படையாகக் கொண்டு இலக்கம் 16 – 19 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**




16. உலர் வலயத்தில் மட்டும் பரவியுள்ள செங்கபில மண்ணைக் காட்டும் இல………………. ஆகும்.
17. ஈர, உலர் வலயங்கள் இரண்டிலும் பரவிக்காணப்படும் …………………………மண்வகை இலக்கம் 6 இல் காட்டப்பட்டுள்ளது.
18. செங்கபில செம்பூரான் மண்வகையினைக் குறிப்பது இலக்கம்……………………………. ஆகும்.
19. கல்சியமற்ற செங்கபில மண் ……………………………. பிரதேசத்தில் பரவியுள்ளது.

- **இலக்கம் 20 – 24 வரையான வினாக்கள் “அ” மற்றும் “ஆ” என இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளன “அ” பகுதியில் உள்ள தகவல்களுக்கு பொருத்தமான விடையினை “ஆ” பகுதியிலிருந்து தெரிவு செய்து சரியான விடைக்குரிய இலக்கத்தினை அருகில் தரப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக**

**20.**

| ‘அ’ **தீவு** | ‘ஆ’ **அமைந்துள்ள கண்டம்** |
|---|---|
| 1- போர்னியோ | A – அவுஸ்திரேலியா |
| 2- தஸ்மேனியா | B- ஆசியா |
| 3- மடகஸ்கார் | C- ஆபிரிக்கா |
| | D- ஐரோப்பா |

(1) A,B,C (2) A,C,B (3) B,A,C (4) B,C,D (…….)

**21.**

| ‘அ’ **பயிரிடப்படும் பிரதேசம்** | ‘ஆ’ **மாவட்டம்** |
|---|---|
| 1- உயர்நிலத் தேயிலை | A – இரத்தினபுரி |
| 2- மத்திய நிலத் தேயிலை | B – மாத்தளை |
| 3- தாழ்நிலத் தேயிலை | C – குருணாகல் |
| | D - நுவரெலியா |

(1) A,B,C (2) B,A,C (3) D,A,C (4) D,B,A (…….)

**22.**

| ‘அ’ **கனிப்பொருள்** | ‘ஆ’ **பரவியுள்ள பகுதி** |
|---|---|
| 1- காரீயம் | A - ராகெதர |
| 2- வெண்களி | B - தெதியாவல |
| 3- பந்துக்களி | C - பொரலஸ்கமுவ |
| | D - புல்மோட்டை |

(1) A,B,C (2) A,C,B (3) B,C,D (4) D,A,C (…….)

**23.**

| ‘அ’ **அமைந்துள்ள பிரதேசம்** | ‘ஆ’ **வனஒதுக்குகள்** |
|---|---|
| 1- வஸ்கமுவ | A - இயற்கை ஒதுக்குகள் |
| 2- ஹக்கல | B - வன ஒதுக்குகள் |
| 3- கன்னெலிய | C - தேசிய பூங்காக்கள் |
| | D-தடைவிதிக்கப்பட்ட ஒதுக்குப் பிரதேசம் |

(1)A,B,C (2) B,C,A (3) C,D,B (4) C,B,D (…….)

**24.**

| ‘அ’ **அனர்த்தங்கள்** | ‘ஆ’ **இடர்கள்** |
|---|---|
| 1- புவிச்சரிதவியல் அனர்த்தம் | A - இடி மின்னல் |
| 2- காலநிலையியல் அனர்த்தம் | B – புவி நடுக்கம் |
| 3- உயிரியல் அனர்த்தம். | C – தொற்று நோய் |

D – காடழிப்பு

(1) A,B,C (2) B,A,C (3) C,D,A (4) D,C,B (…….)

- **இலக்கம் 25 – 36 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் வழங்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான அல்லது மிக பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை எதிரே உள்ள அடைப்புக்குள் எழுதுக**

25. உலகின் சிறிய கண்டம் யாது?
(1) ஐரோப்பா (2) அவுஸ்திரேலியா
(3) தென் அமெரிக்கா (4) வடஅமெரிக்கா (…….)

26. புவியின் கட்டமைப்பில் மையத்திலிருந்து மூடியை வேறுபடுத்தும் எல்லை பின்வருவனவற்றுள் எது?
(1) கூட்டன் பேர்க் தொடர்ச்சியின்மை (2) லேமன்
(3) மோஹோரோசோவிக் (4) கொண்ட்ராட் (.........)

27. ஆரம்ப காலத்தில் கப்பல் கட்டும் தொழில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மட்டும் இடம்பெற்றமைக்கான காரணம் பின்வருவனவற்றுள் எது.?
(1) ஊழியப்படை வசதி
(2) பாரிய முதலீட்டு வசதி
(3) ஆழமற்ற கடற்பரப்பு
(4) கடற்கரைகள் காணப்பட்டமை (…….)

28. இலங்கையின் வலு சக்திப் பயன்பாட்டில் காணப்படும் பிரச்சினை அல்லாதது.
(1) புதுப்பிக்கக்கூடிய சக்திகளுக்கு செலவு அதிகம்.
(2) வலு சக்திப் பயன்பாட்டின் போது வீண்விரயம் அதிகம்.
(3) கிராமப் புறங்களில் சிறிய வலுசக்தி நிலையங்களை ஆரம்பித்தல்
(4) கனிய நெய் இறக்குமதிக்கு அதிக பணம் செலவிடல் (..........)

29. 2012ஆம் ஆண்டு சனத்தொகை கணீப்பீட்டின் படி நாட்டின் ஒரு சதுரகிலோ மீற்றருக்கான சனத்தொகை அடர்த்தி.
(1) 323 (2) 345 (3) 352 (4) 520 (..........)

30. மாரவில, நீர்கொழும்பு, மொரட்டுவ போன்ற இடங்கள் இலங்கையின் எச் சுற்றுலா வலயத்தினுள் உள்ளடங்குகின்றன?
(1) மேற்குக்கரையோரப் பிரதேசம் (2) கொழும்புப் பெரு நகரப் பிரதேசம்
(3) தெற்குக் கரையோரப்பகுதி (4) கொழும்பு நகரம் (..........)

31. A – அமேசன், கொங்கோ பிரதேசம்
B – அமெரிக்காவின் கிழக்குக் கரையோரப்பகுதி
C – வடமேற்கு ஐரோப்பா
D – நைல் நதியின் கழிமுகப் பிரதேசம்
E – லைபீரியா, ஐவரிகோஸ்ட் பகுதி

மேலே தரப்பட்டுள்ள சனத்தொகைப் பிரதேசங்களுள் **இரண்டாம் நிலை** சனத்தொகை மையங்கள் இரண்டினைக் காட்டும் விடை யாது?

A , B (2) B , C (3) C , E (4) D , E (..........)

32. இலங்கையில் குறைந்த சனத்தொகை வளர்ச்சி வேகத்தை கொண்ட மூன்று மாவட்டங்கள் முறையே
(1) கொழும்பு, அம்பாந்தோட்டை, மொனராகல
(2) நுவரெலியா, மொனராகல, அநுராதபுரம்
(3) கொழும்பு, பதுளை, நுவரெலியா
(4) அநுராதபுரம், மொனராகல, அம்பாந்தோட்டை (..........)

33. பேண்தகு அபிவிருத்தியின் பிரதான நோக்கமாக அமைவது
(1) மனிதனின் இருப்பு மற்றும் வாழ்க்கை முறையின் உயர்வு.
(2) சூழல் முகாமைத்துவத்தையும் அபிவிருத்தி முகாமைத்துவத்தையும் ஒன்றிணைத்தல்.
(3) மக்களின் தேவைகள் அதிகரிப்பதனால் உற்பத்தி நடவடிக்கைகளை பரவலடையச் செய்தல்.
(4) தொழில்நுட்பமயமாக்கலால் ஏற்படும் சுற்றுச் சூழல் சமநிலையின்மையைத் தடுத்தல். (..........)

34. உலகில் பெருமளவில் காட்டுத் தீ பரவும் நாடுகள் /வலயங்கள் மூன்றினைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க?
(1) ரஷ்யா, பிரான்ஸ், இந்தோனேசியா
(2) சீனா, மத்தியஆபிரிக்கா நாடுகள், டென்மார்க்
(3) அமெரிக்கா, சீனா, பிரித்தானியா
(4) அவுஸ்திரேலியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா (..........)

35. மின்னல் வகைகளில் மக்களுக்கு அதிக சேதத்தை விளைவிக்கும் மின்னல் வகை யாது?
(1) முகில் மின்னல் (2) வாயு மின்னல்
(3) புவி மின்னல் (4) காந்த மின்னல் (..........)

36. பூகோள வெப்பநிலை அதிகரிப்பிற்கு காரணமான பச்சைவீட்டு வாயுக்கள் இரண்டினைக் காட்டும் விடை.
(1) மீதென், காபனீரொட்சைட் (2) ஒட்சிசன், நைதரசன்,
(3) குளோரோ புளோரோ காபன், நைதரசன், (4) நைதரசன், ஒட்சிசன் (..........)

**கீழே தரப்பட்டுள்ள A,B,C,D ஆகிய எழுத்துக்களால் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றுக்கொன்று தொடர்புடைய சோடிகளை அவதானித்து இல 37 - 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்**.

A - 1.இறப்பு வீதம்
2. ஆயுள் எதிர்பார்ப்பு

B - 1. எழுத்தறிவு
2. அபிவிருத்தி

C - 1. அணுவாயுத சோதனை
2. சூழல் மாசடைதல்

D - 1.உயரம்
2. வெப்பநிலை

37. முதாலவதன் வீழ்ச்சி இரண்டாவதன் அதிகரிப்பிற்கு காரணமான சோடி.?

(1) A (2) B (3) C (4) D (..........)

38. முதலாவதன் அதிகரிப்பு இரண்டாவதன் அதிகரிப்பிற்கு காரணமான சோடி ?

(1) A (2) B (3) C (4) D (..........)

39. முதலாவதன் அதிகரிப்பால் இரண்டாவது குறைவதற்கு காரணமான சோடி ?

(1) A (2) B (3) C (4) D (..........)

40. இரண்டாவதன் குறைவு முதலாவதின் வீழ்ச்சிக்கு காரணமான சோடி ?

(1) A (2) B (3) C (4) D (..........)

(1 x 40 = புள்ளிகள் 40)

**கல்வி அமைச்சு**
**தொலைக்கல்வி அபிவிருத்தி பிரிவு**
**க.பொ.த (சாதாரண தர) பரீட்சை – உதவி கருத்தரங்கு தொடர் - 2022(2023)**

## புவியியல் II

- **இவ்வினாப்பத்திரம் I மற்றும் II என இரண்டு பகுதிகளைக் கொண்டது.**
- **பகுதி I வினாக்கள் கட்டாயமானது அதில் (அ) , (ஆ) மற்றும் (இ) ஆகிய மூன்று பகுதிகளுக்கும் விடையளிக்க வேண்டும்.**
- **பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.**
- **விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்கள் ஐந்து ஆகும்**

### பகுதி I

**1.** (அ) **உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 1 : 50,000 இடவிளக்கப்படத்தின் பகுதியினை நன்கு அவதானித்து அதற்கேற்ப கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும் விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள தாளினைப் பயன்படுத்தவும்.**

i. Ⓐ - Ⓑ கோடுகள் மூலம் காட்டப்படுவது யாது?
(சுவடு / பள்ளத்தாக்கு / சாய்வு) (புள்ளி 01)

ii. Ⓒ எழுத்தின் மூலம் காட்டப்படும் அம்சம் யாது?
(பாறை / பிறப்பயிர் / பற்றைக்காடு) (புள்ளி 01)

iii. Ⓓஎழுத்தின் மூலம் காட்டப்படும் அம்சம் யாது?
(புல்வெளி / பற்றைக் காடு / கிளை ஆறு) (புள்ளி 01

iv. Ⓔ எனும் எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தின் பிரதான வர்த்தகப் பயிர் யாது? (இறப்பர் / தென்னை/ வேறு பயிர்) (புள்ளி 01)

v. இப்பிரதேசத்தின் மேற்கிலிருந்து கிழக்கு வரையாகச் செல்லும் புகையிரதப் பாதை எந்த வகையைச் சேர்ந்தது? (ஒடுங்கிய / அகன்ற தனிப்பாதை / அகன்ற இரட்டைப் பாதை) (புள்ளி 01)


vi. Ⓕ எழுத்தினால் காட்டப்படும் சட்டகத்தினுள் காணப்படும் தரைத்தோற்ற அம்சம் யாது? (புள்ளி 01)

vii. Ⓧ தொடக்கம் Ⓨ வரை காட்டப்பட்டுள்ள புகையிரதப்பாதையின் தூரத்தை கிலோ மீற்றரில் தருக? (புள்ளி 01)

viii. Ⓟ எழுத்தின் மூலம் காட்டப்படும் சதுரத்தினுள் காணப்படும் பொதுச்சேவை வழங்கும் நிறுவனங்கள் இரண்டினைப் பெயரிடுக? (புள்ளி 02)

ix. படப்பிரதேசத்தில் காட்டப்படும் நிர்வாக எல்லைகளை தீர்மானிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ள பௌதிக அம்சம் யாது?
(புள்ளி 01)

(அ)




SCALE : 1 : 50,000

(ஆ) **உமக்கு வழங்கப்பட்டுள்ள உலகப்படத்தினை நன்கு அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும். விடையளிப்பதற்காக உலகப்படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களை பயன்படுத்தவும்.**

- இலக்கம் (i) தொடக்கம் (v) வரையான ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை தெரிவு செய்து அதனை படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரத்தில் உரிய வினா இலக்கத்திற்கு எதிரே உள்ள சதுரத்தில் எழுதவும்.

i. மகரக் கோடு - Ⓐ ,Ⓑ ,Ⓒ

ii. பருத்தி செய்கைக்குப் பிரசித்தி பெற்ற **டெக்ஸாஸ் பிரதேசம்** Ⓓ ,Ⓔ ,Ⓕ

iii. பிலிப்பைன்ஸ் தீவில் காணப்படும் **பினட்டுபோ எரிமலை** - Ⓖ ,Ⓗ ,Ⓘ

iv. ஆசியாவில் அதிக சனத்தொகையைக் கொண்டுள்ள **டோக்கியோ** - Ⓙ ,Ⓚ ,Ⓛ

v. **கலகாரிப்** பாலைவனம் - Ⓜ ,Ⓝ ,Ⓞ (புள்ளி 05)

**(இ) உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இலங்கை புறவுருவப் படத்தினை நன்றாக அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக. விடையளிப்பதற்காக படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள சதுரங்களைப் பயன்படுத்தவும்.**

- இலக்கம் I தொடக்கம் V வரையான ஒவ்வொரு வினாவிற்கும் அருகில் தரப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் மூன்றில் சரியான விடைக்குரிய எழுத்தினை படத்திலிருந்து தெரிவு செய்து படத்திற்கு அருகில் தரப்பட்டுள்ள உரிய வினா இலக்கத்திற்கு நேரே தரப்பட்டுள்ள சதுரத்தில் எழுதவும்.

i. **கெனியோன்** மின்சக்தி நிலையம் - Ⓐ ,Ⓑ ,Ⓒ

ii. இலங்கையில் அதிக மழைவீழ்ச்சி கிடைக்கும் **மாலிபொட**- Ⓓ ,Ⓔ ,Ⓕ

iii. **ஹிங்குராக்கொட** நெல்ஆராய்ச்சி நிலையம் - Ⓖ ,Ⓗ ,Ⓘ

iv. **தேவேந்திரமுனை** - Ⓙ ,Ⓚ ,Ⓛ

v. **புல்மோட்டை** கனிய மணல் - Ⓜ ,Ⓝ ,Ⓞ (புள்ளி 05)

புவியியல் II

Geography II

1· (அ) /(a)

I. ---------------------------------------------------------------------------------------

II. ---------------------------------------------------------------------------------------

III. ---------------------------------------------------------------------------------------

IV. ---------------------------------------------------------------------------------------

V. ---------------------------------------------------------------------------------------

VI. ---------------------------------------------------------------------------------------

VII. ---------------------------------------------------------------------------------------


VIII. ---------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------

IX. ---------------------------------------------------------------------------------------


/10

(ஆ) /(b)




(i)
(ii)
(iii)
(iv)
(v)
/5


(இ) /(c)




(i)
(ii)
(iii)
(iv)
(v)
/5

பகுதி II

கற்கோளத்தின் பிரதான புவித்தகடுகளைக் காட்டும் உலகப் புறவுருவப்படம் கீழே காட்டப்பட்டுள்ளது.




2. (i) தேசப்படத்தில் A , B எழுத்துக்கள் மூலம் காட்டப்படும் புவித்தகடுகளை ஒழுங்கு முறைப்படி எழுதுக. (புள்ளி 02)

(ii)கற்கோளத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் போது கற்கோளத்திற்கு ஏற்படும் பாதிப்புக்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (புள்ளி 03)

(iii) உயிர்க்கோளத்தின் சமநிலையைப் பேணுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றினை சுருக்கமாக விளக்குக? (புள்ளி 05)

3. (i) கீழே தரப்பட்டுள்ள பயிர்களுக்கான ஆராய்ச்சி நிலையங்களைக் குறிப்பிடுக?

A - இறப்பர் B – தென்னை (புள்ளி 02)

(ii) இலங்கையில் இறப்பர், தென்னை உற்பத்தி சார்ந்த பொதுவான பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிடுக? (புள்ளி 03)

(iii) விவசாயப் பயிர்ச் செய்கையின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கான மூன்று தீர்வுகளைக் குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினைச் சுருக்கமாக விளக்குக? (புள்ளி 05)

**4.** (i) உலகின் இலத்திரனியல் உபகரண உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் இரண்டு கிழக்காசிய நாடுகளைக் குறிப்பிடுக? (புள்ளி02)

(ii) உலகின் இலத்திரனியல் கைத்தொழிலின் நவீன போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக? (புள்ளி 03)

(iii) (a) இலத்திரனியல் கைத்தொழில் சார்ந்த சூழல் பிரச்சினைகள் இரண்டு தருக?

(b) அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிமுறையொன்றினைக் குறிப்பிட்டு அதனைச் சுருக்கமாக விளக்குக?

(புள்ளி 05)

**5.** (i) உலோகக் கனியங்களுக்கு இரு உதாரணங்கள் தருக (புள்ளி 02)

(ii) கனிய வளங்களைப் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்றினைக் குறிப்பிடுக (புள்ளி 03)

(iii) (a)இலங்கையில் கனியவளங்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் இரண்டு தருக?

(b) இலங்கையில் காணப்படும் கனியவளங்களை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்திக் கொள்ளக்கூடிய விதத்தினை உதாரணமொன்றினூடாக சுருக்கமாக விளக்குக? (புள்ளி 05)

**6.** (i) (a) தென் ஆசியாவில் அதிக சனத்தொகை அடர்த்தியினை கொண்ட நாட்டை குறிப்பிடுக

(b) தென் ஆசியாவில் வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வீதம் உயர்வாக உள்ள நாடு எது? (புள்ளி 02)

(ii) இலங்கையின் வருடாந்த சனத்தொகை வளர்ச்சி வேகம் குறைவடைவதற்கு ஏதுவான காரணங்கள் மூன்றினைத் தருக? (புள்ளி 03)

(iii) உலகின் சனத்தொகை வளர்ச்சி வேக அதிகரிப்பால் ஏற்படும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அதனை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையொன்றினை சுருக்கமாக விளக்குக? (புள்ளி 05)

**7.** (i) இலங்கையில் பயன்படுத்தப்படும் பிரதான சக்திமூலங்கள் இரண்டு தருக? (புள்ளி 02)

(ii) வலுசக்தி பயன்பாட்டின் போது ஏற்படும் பிரச்சினைகள் மூன்று தருக?

(புள்ளி 03)

(iii) சக்தி வளங்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிட்டு ஒன்றைச் சுருக்கமாக விளக்குக? (புள்ளி 05)

**8.** (i) கீழே தரப்பட்டுள்ள இயற்கை இடர்களால் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாகும் இலங்கையின் மாவட்டங்கள் ஒன்று வீதம் குறிப்பிடுக?

(a) மண்சரிவு (b) வெள்ளப்பெருக்கு (புள்ளி 02)

(ii) வரட்சி அனர்த்தம் காரணமாக,

(a) மானிட சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு ஒன்றினையும்,

(b) பௌதிக சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் இரண்டினையும் குறிப்பிடுக?

(புள்ளி 03)

(iii) மண்சரிவால் மானிட சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் மூன்றினைக் குறிப்பிட்டு அதனை இழிவளவாக்க மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

(புள்ளி 05)